Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 124 | உள்ளூர் - 04.05.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 124 | வெளியூர் - 05.05.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



கேது யோகம்... இவர்களுக்கு பெரும் ஜாக்பாட்..!

இந்திய இராணுவத்தில் 190 காலியிடங்கள்!

புதுசேரியில் என்.டி.ஏ. கூட்டணி வெற்றி!

இரண்டு, மூன்றாம் இடத்தில் திராவிட கட்சிகள்


# துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனனுக்கு பிரதமர் மோடி பிறந்தநாள் வாழ்த்து!



புதுடெல்லி, மே. 04–

துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள். விக்ஸித் பாரதம் என்ற நமது கூட்டு கனவை வலுப்படுத்த அவர் எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். நமது நாடாளுமன்ற நடவடிக்கைகளின் செயல்திறனையும், பயனுடைமையையும் மேம்படுத்துவதற்கான அவரது தொடர்ச்சியான முயற்சிகள், ஜனநாயக விழுமியங்களின் மீதான அவரது ஆழ்ந்த அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கின்றன என பிரதமர் மோடி புகழாரம் சூட்டினார்.

ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்கள் மீதான அக்கறையுடன், அனைத்துத் துறை வளர்ச்சிக்கான அவரது அசைக்க முடியாத பேரார்வமும் அதே அளவு ஊக்கமளிக்கிறது. அவரது பொது வாழ்க்கை, அர்ப்பணிப்பு, ஒழுக்கம் மற்றும் தெளிவான குறிக்கோளால் தொடர்ந்து வழிநடத்தப்படுகிறது. அவர் நல்ல ஆரோக்கியத்துடனும், மகிழ்ச்சியுடனும், தேச சேவையில் நீண்ட ஆயுளுடனும் வாழ நான் பிரார்த்திக்கிறேன் என பிரதமர் மோடி தனது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# மே. வங்காளம், அசாமில் ஆட்சியமைக்கும் பாஜ!

திருவனந்தபுரம், மே. 04–

கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 90+ தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. இதன் மூலம் இக்கூட்டணி கேரளாவில் மீண்டும் ஆட்சியை கைப்பற்ற



உள்ளது.

காலை 11 மணி நிலவரப்படி, ஐக்கிய ஜனநாயக முன்னணி 92 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. இடது ஜனநாயக முன்னணி 42 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. அதேநேரத்தில், தேசிய ஜனநாயகக் கூட்டணி 1 இடத்தில் மட்டும் முன்னிலை வகித்து வருகிறது.

கேரளாவில் மார்க்சிஸ்ட் தலைமையிலான ஆளும் இடது ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆகியவை இந்த தேர்தலில் பிரதான அணிகளாக களமிறங்கின.

மொத்தமுள்ள 140 சட்டப் பேரவைத் தொகுதிகளில், ஐக்கிய ஜனநாயக முன்னணியில் காங்கிரஸ் 95 தொகுதிகளில் போட்டியிட்டது. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 27 தொகுதிகளில் போட்டியிட்டது. இதர தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு வழங்கப்பட்டன.

இடது ஜனநாயக முன்னணி சார்பில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 86 தொகுதிகளில் போட்டியிட்டது. இதர தொகுதிகளில் கூட்டணி கட்சிகள் போட்டியிட்டன. தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக 115 தொகுதிகளில் போட்டியிட்டது. இதர தொகுதிகள் அதன் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டன.

கேரளாவில் 140 தொகுதிகளுக்கும் கடந்த ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் 43 மையங்களில் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன. வாக்கு எண்ணும் பணியில் 15,465 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

காலை 11 மணி நிலவரப்படி காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 93 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. இடது ஜனநாயக முன்னணி 42 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஒரு தொகுதியில் முன்னிலை வகித்து வருகிறது.

அருதிப் பெரும்பான்மைக்கு 71 தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் எனும் நிலையில், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி 90க்கும் அதிக இடங்களில் முன்னிலை வகித்து வருவதால் அக்கூட்டணி மீண்டும் ஆட்சியை கைப்பற்ற இருக்கிறது.

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் காலை 10 மணி நிலவரப்படி பாஜக 144 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது. திரிணமூல் காங்கிரஸ் 106 தொகுதிகளில் முன்னிலை வகித்து வருகிறது.

காலை 10 மணி நிலவரப்படி பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 144 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. திரிணமூல் காங்கிரஸ் கட்சி 105 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. காங்கிரஸ் கட்சி 3 தொகுதிகளில் முன்னிலை வகிக்கிறது. மற்றவர்கள் 4 இடங்களில் முன்னிலை வகிக்கிறார்கள்.

மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 தொகுதிகளுக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. முதல்கட்டத் தேர்தல் ஏப்ரல் 23ம் தேதியும் இரண்டாம் கட்டத் தேர்தல் ஏப்ரல் 29ம் தேதியும் நடைபெற்றன. இரண்டாம் கட்டத் தேரத்லில் வாக்குப்பதிவு நடைபெற்ற தொகுதிகளில், ஃபால்டா தொகுதிக்கு வரும் 21ம் தேதி மறு வாக்குப்பதிவு நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளதால் 293 தொகுதிகளில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

மேற்கு வங்கத்தில் முதல்வர் மம்தா தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து 15 ஆண்டுகளாக மம்தா பானர்ஜி முதல்வராக உள்ளார். திரிணமூல் காங்கிரஸுக்கு பாஜக கடும் சவாலை அளித்து வருகிறது. 148 தொகுதிகளில் வெற்றி பெறும் கட்சி ஆட்சியைப் பிடிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**அஸ்ஸாமில் மீண்டும் ஆட்சி அமைக்கும் பாஜக**

அஸ்ஸாமில் பாஜக 98,காங்கிரஸ் 26, அஇஜஜமு 2 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன

# புதுவையில் மீண்டும் ரங்கசாமி ஆட்சி?



புதுவை, மே. 04–

புதுவை சட்டசபை தேர்தலில் என்.டி.ஏ கூட்டணி 23 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. இந்தியா கூட்டணி 5 இடங்களிலும் முன்னிலை பெற்றுள்ளது. விஜய்யின் தவெக ஒரு இடங்களில் கூட முன்னிலை பெறவில்லை. பெரும்பான்மைக்கு தேவையான 16 இடங்களை தாண்டி என்.டி.ஏ கூட்டணி முன்னிலை வகிப்பதால் மீண்டும் ரங்கசாமி ஆட்சி அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சற்று நேரத்தில் மக்களின் தீர்ப்பு என்ன என்பது தெரிந்து விடும்.

## தமிழக சட்டசபை தேர்தல்

# எதிர்பார்ப்பை எகிற வைக்கும் ரிசல்ட்: தனிப்பெரும்பான்மையுடன் த.வெ.க.?

## 2–ம், 3–ம் இடத்தில் திராவிட கட்சிகள்!!




சென்னை, மே. 04–

234 சட்டசபை தொகுதிகளில் பதிவான வாக்குகள் இன்று (திங்கட்கிழமை) எண்ணப்பட்டு வருகின்றன. இதன் முடிவில் யார் அரியணையில் அமரப்போகிறார்கள் என்பது தெரியவரும். தற்போது நடைபெற்று வரும் தமிழக சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆரம்ப கட்டத்திலிருந்தே முன்னிலை வகித்து வருகிறது.

இந்நிலையில் மதுரையில் 10 தொகுதிகளில் 7–இல் தவெக முன்னிலை வகிக்கிறது. இதன்படி சோழவந்தான், உசிலம்பட்டி, திருப்பரங்குன்றம், மதுரை மத்தி, மதுரை மேற்கு உள்ளிட்ட 7 தொகுதிகளில் த.வெ.க. முன்னிலையில் உள்ளது.

வாக்கு எண்ணிக்கை தற்போதைய முன்னணி நிலவரம்:–

த.வெ.க. – 107
அ.தி.மு.க. – 66
தி.மு.க. – 63
நா.த.க. – 0

**யார் யார் முன்னிலை..?...**

* கொளத்தூர் தொகுதியில் முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடர்ந்து பின்னடைவு.
* வடக்கு மண்டலத்தில் மொத்தம் உள்ள 82 தொகுதிகளில் 43 இடங்களில் தவெக முன்னிலையில் உள்ளது. அதிமுக கூட்டணி 24 இடங்களிலும், திமுக கூட்டணி 15 இடங்களிலும் முன்னிலையில் உள்ளது.
* மேலூர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் விஸ்வநாதன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதிமுக வேட்பாளரை விட 2,731 வாக்குகள் கூடுதலாக பெற்று காங்கிரஸ் வேட்பாளர் பெற்றுள்ளார்.
* கோபிசெட்டிப்பாளையம் தொகுதியில் 10வது சுற்று முடிவில் 9,105 வாக்கு வித்தியாசத்தில் தவெக வேட்பாளர் செங்கோட்டையன் முன்னிலை வகித்து வருகிறார்.
* மதுரை மத்திய தொகுதியில் 8 சுற்று முடிவில் தவெக வேட்பாளர் 13,956 வாக்குகள் முன்னிலையில் உள்ளார்.
* காட்டுமன்னார்கோவில் தொகுதியில் 5 சுற்று முடிவில் 538 வாக்குகள் வித்தியாசத்தில் விசிக முன்னிலையில் உள்ளது.
* ரிஷிவந்தியம் தொகுதியில் 5 சுற்று முடிவில் 60 வாக்கு வித்தியாசத்தில் தவெக முன்னிலையில் உள்ளது.
* சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியில் 3,337 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் பெரியகருப்பன் முன்னிலையில் உள்ளார்.
* கும்பகோணம் தொகுதியில் 10 வது சுற்று முடிவில் 35,295 வாக்குகள் பெற்று திமுக வேட்பாளர் அன்பழகன் முன்னிலையில் உள்ளார்.
* துறையூர் தொகுதியில் 7வது சுற்று முடிவில் தவெக வேட்பாளர் ரவிசங்கர் முன்னிலையில் உள்ளார்.
* விருத்தாச்சலம் தொகுதியில் 7வது சுற்று முடிவில் பிரேமலதா விஜயகாந்த் 22,588 வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார்.
* திருமயம் தொகுதியில் 9வது சுற்று முடிவில் 1307 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வேட்பாளர் ரகுபதி முன்னிலையில் உள்ளார்.
* கடையநல்லூர் தொகுதியில் 9வது சுற்று முடிவில் 2,490 வாக்கு வித்தியாசத்தில் மதிமுக முன்னிலையில் உள்ளது.
* தூத்துக்குடி தொகுதியில் தவெகவின் ஸ்ரீநாத் முன்னிலையில் உள்ளார்.
* ஆலந்தூர் தொகுதியில் தவெகவின் ஹரீஷ் முன்னிலையில் உள்ளார்.
* மதுரவாயல் தொகுதியில் தவெகவின் ரேவந்த் சரண் முன்னிலையில் உள்ளார்.
* துறைமுகம் தொகுதியில் சேகர்பாபு முன்னிலையில் உள்ளார்.

# பாகிஸ்தானில் 13 தலீபான்கள் சுட்டுக்கொலை!




பாகிஸ்தான், மே. 04–

பாகிஸ்தானுக்கும் அதன் அண்டை நாடான ஆப்கானிஸ்தானுக்கும் இடையே மோதல் உருவாகி தொடர்ந்து வலுத்து வருகிறது. இந்த மோதலின் ஒரு பகுதியாக கைபர் பக்துன்க்வா மாகாணம் வழியாக ஆப்கானிஸ்தானை சேர்ந்த தலீபான் பயங்கரவாதிகள் பாகிஸ்தானுக்குள் ஊடுருவ முயன்றது தெரிந்தது.

இது குறித்து தகவல் அறிந்த பாகிஸ்தான் ராணுவத்தினர் அங்கு ரோந்து பணி மேற்கொண்டனர். அப்போது இருதரப்புக்கும் இடையே பயங்கர துப்பாக்கிக்சூடு நடந்தது. ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகிலுள்ள பாகிஸ்தானின் மொஹமண்ட் மற்றும் வடக்கு வசீரிஸ்தான் ஆகிய மாவட்டங்களில் இந்த பயங்கர துப்பாக்கிச்சூடு நடந்தது. இந்த சம்பவத்தில் தலீபான் அமைப்பைச் சேர்ந்த 13 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதிகளில் கூடுதல் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகிறது.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 04.05.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 21-ம் தேதி

# ஈரப்பத வெப்ப அலை... இந்தியர்களுக்கு அலர்ட்!



ஈரப்பத வெப்ப அலையால் இந்தியர்கள் பாதிக்கப்படுவதாக இங்கிலாந்து பல்கலைக்கழக ஆய்வில் தெரியவந்துள்ளது. இது குறித்து சுருக்கமாகவும் தெளிவாகவும் பார்ப்போம்.

இங்கிலாந்தில் உள்ள ரெடிங் பல்கலைக்கழகத்தில் (University of Reading) உள்ள அறிவியலாளர்கள், இந்தியா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தின் (UK) ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து, இந்தியாவின் பருவமழை காலத்தில் வரும் "ஈரப்பதத்துடன் கூடிய வெப்ப அலைகள்" எவ்வாறு இயங்குகின்றன என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அந்த ஆய்வின் முடிவுகள் தொடர்பாக, கிளைமேட் டைனமிக்ஸ் (Climate Dynamics) என்ற ஆய்விதழில், கோடை, பருவமழை காலத்தில் இந்தியாவில் ஏற்படும் ஈரப்பதமான வெப்ப அலைகளின் அமைப்பு என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்று அண்மையில் வெளியானது. அதில் கூறப்பட்டுள்ள சில தகவல்களைப் பார்ப்போம்.

மனித உடல், வியர்வையை வெளியேற்றி ஆவியாதல் மூலம் தன்னைக் குளிர்விக்கிறது. இது வறண்ட வெப்ப காலத்தில் இயல்பாக நடைபெறுகிறது. ஆனால் பருவமழை காலத்தில் இந்தியாவின் பெரும்பகுதியில் உள்ளதுபோல், காற்று ஏற்கெனவே ஈரப்பதத்தால் நிறைந்திருக்கும்போது, அந்த ஆவியாதல் மெதுவாக நடக்கிறது அல்லது முழுவதுமாக நடைபெறாது.

இதன் காரணமாக உடல் குளிர்வித்தல் நடைபெறாமல் உடல் வெப்பநிலை உயர்கிறது. வெப்பச் சோர்வும், வாதமும் விரைவாக ஏற்படுகிறது; இது நீடிக்கும் பட்சத்தில் சில மணி நேரங்களில் மரணம் ஏற்படுகிறது. அன்றைய நாளில் பதிவான வெப்பநிலை இயல்பானதாகத் தெரியலாம். ஆனால் காற்றில் அதிக ஈரப்பதம் நிலவுகையில் நாம் உணரக்கூடிய வெப்ப நிலை அதிகமாகிறது.

சென்னையில் கடந்த 2024–ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற விமான சாகச கண்காட்சியின்போது ஏற்பட்ட 5 பேர் மரணம் மற்றும் பலர் மயக்கமடைந்ததற்கு காற்றில் இருந்த அதிக ஈரப்பதம் தான் காரணம். அன்று, 32 டிகிரி செல்சியல் வெப்பநிலை நிலவியது. காற்றில் இருந்த ஈரப்பதம் காரணமாக அது 42 டிகிரி செல்சியஸ் போன்ற பாதிப்பை ஏற்படுத்தியது.

ஈரப்பத வெப்ப அலையால் இந்தியாவில், விவசாய தொழிலாளர்கள், நகர்ப்புறங்களில் கட்டுமான தொழிலாளர்கள், கான்கிரீட் வீடுகளில் வசிக்கும் முதியோர் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த ஆய்வானது, வெப்பம் மற்றும் ஈரப்பதம் அடிப்படையிலான வெப்ப அளவீட்டை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் மிகவும் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்பு என்னவெனில், ஈரப்பதத்துடன் கூடிய வெப்பத்தை ஏற்படுத்துவதில் மட்டுமின்றி, இந்தியாவில் அது எங்கே மிகவும் ஆபத்தாக இருக்கும் மற்றும் எப்போது தாக்கும் என்பதைத் தீர்மானிப்பதிலும் பருவமழையின் பங்கு உள்ளது என்பதுதான். இதை 4 வாரங்களுக்கு முன்பே கண்டுபிடித்து உரிய எச்சரிக்கையை வழங்க முடியும் என்று அந்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தேசத்தை உலுக்கிய கொடூரங்கள்... 3 ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் வெடித்த மணிப்பூர் கலவரம்!



இம்பால், மே. 04–

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மணிப்பூரில், கடந்த 2023–ம் ஆண்டு மே 3–ந்தேதி மெய்தி மற்றும் குக்கி இன மக்களுக்கு இடையே கலவரம் வெடித்தது. கலவரத்தில் ஈடுபட்டவர்கள் அரங்கேற்றிய கொலைகளும், பாலியல் வன்கொடுமைகளும் வீடியோக்களாக வெளியாகி நாட்டையே உலுக்கியது.

மணிப்பூரில் பெண்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட பாலியல் குற்றங்கள் தேசத்தை தலைகுனிய வைத்தன. மாநில பா.ஜ.க. அரசு, கலவரத்தை கட்டுப்படுத்த தவறியதாக கூறி எதிர்க்கட்சியினர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர். மணிப்பூர் கலவரத்தை கண்டித்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன. மணிப்பூர் கலவரத்தில் 250–க்கும் அதிகமானோர் பலியான நிலையில், வன்முறை காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பல மாதங்களாக நிவாரண முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். இதற்கிடையில், மணிப்பூர் முதல்–மந்திரியாக இருந்து வந்த பைரேன் சிங் தனது பதவியை ராஜினாமா செய்ததை தொடர்ந்து, அங்கு ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது. பின்னர், ஜனாதிபதி ஆட்சி திரும்ப பெறப்பட்டு, பா.ஜ.க. மூத்த தலைவர் கேம்சந்த் சிங் முதல்–மந்திரியாக பதவியேற்றார்.

இதற்கிடையில் மணிப்பூரில் பதற்றத்தை தணிப்பதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. நீண்டகாலமாக ஊரடங்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இணைய சேவை தடை செய்யப்பட்டது. இந்திய ராணுவத்தினர் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இத்தகைய முயற்சிகளால் படிப்படியாக மணிப்பூரில் அமைதி திரும்பினாலும், அவ்வப்போது சில மோதல் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

மலைவாழ் குக்கி இன மக்கள் தங்களுக்கு தனி நிர்வாகம் வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதே சமயம், இம்பால் பள்ளத்தாக்கில் பெரும்பான்மையாக உள்ள மெய்தி இன மக்கள், தேசிய குடிமக்கள் பதிவேட்டை (NRC) செயல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், மணிப்பூரில் வன்முறை வெடித்து இன்றோடு 3 ஆண்டுகள் ஆகியுள்ளது. இருப்பினும் வன்முறையால் ஏற்பட்ட சுவடுகள் இன்னும் நீங்கவில்லை. வன்முறையால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மணிப்பூரில் பல்வேறு குழுக்கள் சார்பில் இன்று முழு அடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இம்பால் பள்ளத்தாக்கு பகுதிகளில் மெய்தி இனத்தை சேர்ந்த மக்கள் பேரணிகளை நடத்தினர். அதே சமயம், காங்போக்பி, சுராசந்த்பூர் உள்ளிட்ட மாவட்டங்களில் குக்கி இன மக்கள் கடைகளை அடைத்து கலவரத்தில் உயிரிழந்த வர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். பிஷ்ணுபூர் மாவட்டத்தில் ஐக்கிய பாதுகாப்புக் குழு ஏற்பாடு செய்திருந்த பேரணியில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். அவர்கள் கலவரத்தால் ஏற்பட்ட இழப்புகளையும், பாதிப்புகளையும் சோகத்துடன் நினைவு கூர்ந்தனர்.

# தவெக வேட்பாளர்கள்.. ரிசார்ட்'டில்?



சென்னை, மே. 04–

தமிழக சட்டசபைக்கான வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்று வருகிறது. இந்த தேர்தலில் 233 தொகுதிகளில் விஜய்யின் தவெக தனித்துப் போட்டியிடுகிறது. எடப்பாடி தொகுதியில் மட்டும் சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவு அளித்துள்ளது. இந்தநிலையில், வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், 10 மணி நிலவரப்படி தவெக 103 இடங்களில் முன்னிலை வகித்து வருகிறது. ஆட்சியை பிடிக்கும் நோக்கில் தவெக சென்று கொண்டிருக்கிறது.

இதனிடையே, சில தொகுதிகளில் வெற்றி பெறும் தவெக வேட்பாளர்களை குதிரை பேரத்தின் அடிப்படையில் இழுக்க திமுக, அதிமுக முயற்சி செய்யலாம் என விஜய்க்கு தகவல் கிடைத்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, 2 நாட்களுக்கு முன்பு கட்சியின் வேட்பாளர்களுடன் ஆலோசனை நடத்திய விஜய், 'வெற்றி பெற்றதும் வேறு எங்கும் செல்லாமல் எந்நேரமாக இருந்தாலும் பனையூருக்கு வந்துவிட வேண்டும். உங்களுக்காக நான் காத்திருப்பேன்' என அறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், மாமல்லபுரம் அருகே பூஞ்சேரியில் உள்ள ஒரு தனியார் விடுதியை தவெகவினர் தயார் செய்து வைத்துள்ள தகவல் கசிந்துள்ளது. வெற்றி பெறும் வேட்பாளர்களை அங்கு தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதன்படி, வெற்றி பெற்ற எம்எல்ஏ–க்களை பாதுகாப்பாக வைக்க பூஞ்சேரியில் உள்ள தனியார் விடுதியில் 100 பேர் தங்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேட்பாளர்களை சிதறாமல் அந்த இடத்துக்கு அழைத்து வரும் முக்கிய பொறுப்பை ஆதவ் அர்ஜுனாவிடம் விஜய் ஒப்படைத்துள்ளதாக கூறப்படுகிறது.

# விஜய் வீட்டுக்கு முன் 100-க்கும் மேற்பட்ட போலீசார் குவிப்பு..!




சென்னை, மே. 04–

சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் தற்போது புதிய பரபரப்பு உருவாகியுள்ளது. தற்போதைய நிலவரங்களின்படி, நிலவரப்படி தவெக முன்னிலை வகிக்கிறது. இதற்கிடையே சென்னையில் உள்ள தவெக தலைவர் விஜய் இல்லத்தில் ஏராளமான போலீசார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டுள்ளனர்.

தகவலின்படி, விஜய் இல்லத்தின் முன்பகுதியில் ஒரு துணை ஆணையர் தலைமையில், ஒரு உதவி ஆணையர், ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் CRPF வீரர்கள் உட்பட 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். எந்தவித அசம்பாவிதமும் நடைபெறாமல் தடுக்கும் நோக்கில் இந்த பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேபோல், விஜய் இல்லத்துக்கு அருகிலுள்ள கபாலீஸ்வரர் கோயில் நுழைவாயில் பகுதியிலும் கூடுதல் போலீஸ் பாதுகாப்பு அமைக்கப்பட்டுள்ளது. அங்கு மட்டும் சுமார் 150–க்கும் மேற்பட்ட போலீசார் நிறுத்தப்பட்டு கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். ரசிகர்கள் மற்றும் தொண்டர்கள் அதிகளவில் கூடாமல் இருக்கவும், கூட்ட நெரிசல் ஏற்படாமல் தடுக்கவும் இந்த பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. முக்கிய வழித்தடங்களில் போலீசார் வாகன சோதனையிலும் ஈடுபட்டுள்ளனர்.

# கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன் போட்டியிட்ட தொகுதியில் 5 வெடிகுண்டுகள் பறிமுதல்!





கண்ணூர், மே. 04–

கேரள முதல்–மந்திரியாக இருப்பவர் பினராயி விஜயன். இவர் கண்ணூர் மாவட்டம் தர்மடம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டார். கேரளத்தில் 140 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு கடந்த மாதம் 9–ம் தேதி நடந் தது. இன்று (திங்கட்கிழமை) வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. இந்த நிலையில் தர்மடம் தன்னடா பகுதியில் வெடிகுண்டு தயாரித்து வைத்து உள்ளதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் எடக்காடு போலீசார், தனிப்படை போலீசார் விரைந்து சென்று அந்த பகுதியில் உள்ள ஒரு வீட்டில் சோதனை நடத்தினர்.

அங்கு பட்டாசு தயாரிக்கும் நானு என்பவரது வீட்டில் இருந்து சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட 5 வெடிகுண்டுகள், 3 கிலோ வெடிப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் வெடிகுண்டு தடுப்பு பிரிவு நிபுணர்கள் வெடிகுண்டு களை கைப்பற்றி செயலிழக்க செய்தனர். முதல்–மந்திரி பினராயி விஜயன் போட்டி யிட்ட தர்மடம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.52 கோடி!



திருப்பதி, மே 04–

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.


இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 71 ஆயிரம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 36 ஆயிரத்து 144 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தான அறிவித்த ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடியே 52 லட்சம் ஆகும்.

# மும்பையில் ரூ.7 கோடி மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்: 2 பேர் கைது!



மும்பை, மே. 04–

கென்ய நாட்டின் தலைநகர் நைரோபியில் இருந்து வந்த விமானம் ஒன்று நேற்று மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கியது. இதையடுத்து, அந்த விமானத்தில் வந்திறங்கிய தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரை சேர்ந்த ஜெஹ்ரீல் லுவோடா என்ற பயணியை அதிகாரிகள் சோதனை செய்தனர். அதில் அவர் உடைமைகளில் மறைத்து வைத்து கடத்தி வந்த 1,426 கிராம் கொகைன் என்ற போதைப்பொருளை அதிகாரிகள் கண்டுபிடித்து பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.7 கோடி ஆகும். இதையடுத்து ஜெஹ்ரீல் லுவோடாவை அதிகாரிகள் கைது செய்தனர். மேலும் இது தொடர்பாக தென் மும்பையின் நாக்பாடா பகுதியை சேர்ந்த பட்டேலையும் அதிகாரிகள் அதிரடியாக கைது செய்தனர்.



# கேது யோகம்... இந்த ராசிக்காரர்களுக்கு பெரும் ஜாக்பாட்..!



ஜோதிடத்தின்படி, ராகு வெளிநாடுகளுக்குக் காரகராகவும், கேது ஒருவரின் சொந்த ஊருக்குக் காரகராகவும் கருதப்படுகிறார்கள். ஜாதகத்தில் கேது வலுவாக அமைந்திருப்பவர்கள், பொதுவாகத் தங்கள் சொந்த ஊரை விட்டு வெளியேற விரும்புவதில்லை. வக்ர கதியுடைய மற்றும் அசுப கிரகமாக அறியப்படும் கேது, தற்போது சிம்ம ராசியில் சஞ்சரித்து வருகிறார்.

ஸ்திர ராசியான சிம்மத்தில் கேது சஞ்சரிப்பதால், வேலையில்லாமல் இருப்பவர்களுக்குத் தங்கள் சொந்த ஊரிலேயே வேலை கிடைக்கும் வாய்ப்பு உருவாகும். திருமணமும் சொந்த ஊரிலேயே கைகூடும் வாய்ப்புள்ளது. டிசம்பர் 6–ஆம் தேதி வரை கேது இந்த ராசியிலேயே நீடிக்க இருப்பதால், மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு மற்றும் மீனம் ஆகிய ராசிக்காரர்களுக்கு ஒன்று அல்லது இரண்டு 'தன யோகங்கள்' ஏற்படும் வாய்ப்புள்ளது.

**மேஷம்:** ஐந்தாம் வீட்டில் கேது சஞ்சரிப்பதால், இந்த ராசிக்காரர்களுக்குத் தங்கள் சொந்த ஊரிலேயே வேலை கிடைக்கும் வாய்ப்பு அதிகம் உள்ளது. பொதுவாக, வேலையை மாற்றிக்கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்காது. தாங்கள் பணிபுரியும் ஊரிலேயே அனைத்து வகையிலும் நிரந்தரமாகக் குடியேறும் வாய்ப்பும் உள்ளது. பங்குச் சந்தை மற்றும் ஊக வணிகங்கள் (speculations) மூலம் இவர்கள் பெரும் லாபம் அடைவார்கள். கடன் தொடர்பான பிரச்சனைகள் பெருமளவு குறையும் வாய்ப்புள்ளது. தங்கள் போட்டியாளர்களை விட இவர்கள் ஒரு படி மேலே நின்று ஆதிக்கம் செலுத்துவார்கள். வேலையில் இவர்களின் திறமை சிறப்பாக அங்கீகரிக்கப்படும்.வருமானத்தை அதிகரிக்க இவர்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும்.

**மிதுனம்:** மூன்றாம் வீட்டில் கேது சஞ்சரிப்பதால், இந்த ராசிக்காரர்களுக்கு விரைவில் வேலை கிடைத்து, ஓரிடத்தில் நிரந்தரமாக நிலைபெறும் வாய்ப்பு உள்ளது. வேலையில் இடமாற்றங்களோ அல்லது வெளியூர் பயணங்களோ ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும். சொந்த ஊருக்குள்ளேயே வேலையை மாற்றிக்கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படலாம். வருமானம் கணிசமாக உயரும்; இருப்பினும், செலவு செய்வதற்கு நீங்கள் மிகவும் தயக்கம் காட்டுவீர்கள். வருமானம் தொடர்ந்து உயருமே தவிர, குறையாது. பங்குச் சந்தை, ஊக வணிகங்கள் மற்றும் பிற நிதி சார்ந்த பரிவர்த்தனைகள் மூலம் மிகுந்த லாபம் கிடைக்கும். பெரும்பாலான நிதி சார்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்படும்.

**சிம்மம்:** இந்த ராசியிலேயே கேது சஞ்சரிப்பதால், இந்த ராசிக்காரர்கள் பெரும்பாலும் தனியார் நிறுவனங்களிலேயே பணிபுரியும் வாய்ப்புள்ளது. வேலையை மாற்றிக்கொள்வதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும். பொதுவாக, இவர்கள் தங்களுக்கெனச் சொந்தமாக ஒரு நிறுவனத்தையோ அல்லது தொழிலையோ அமைத்துக்கொள்வார்கள். எதிர்பாராத வழிகளில் வருமானம் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. திடீர் நிதி ஆதாயங்கள் கிடைக்கவும், லாட்டரி, சூதாட்டம் மற்றும் பங்குச் சந்தை மூலம் பணம் ஈட்டவும் வாய்ப்புகள் உள்ளன. தந்தையின் வழி உறவினர்கள் மூலம் சொத்துக்கள் அல்லது வாரிசுரிமைச் சொத்துக்கள் கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

**துலாம்:** இந்த ராசிக்காரர்களுக்கு, வெறும் லாபம் மட்டுமல்லாமல், கேதுவின் சஞ்சாரம் எல்லாவற்றையும் 'தங்கமாகவே' (மிகச் சிறந்த நன்மைகளாகவே) மாற்றிக்கொடுக்கும். வருமானம் அதிகரித்தாலும், இவர்கள் அதைச் செலவிட விரும்புவதில்லை. இவர்களுக்கு விருப்பங்கள், நம்பிக்கைகள் மற்றும் லட்சியங்கள் ஆகியவை குறைவாகவே இருக்கும். இவர்கள் தங்கள் வருமானத்தை அதிகரிப்பதில் மட்டுமே முழு கவனம் செலுத்துவார்கள். திடீர் பண வரவுக்கான வாய்ப்புகளும் உள்ளன. பல வழிகளில் வருமானம் பெருகும். பங்குச் சந்தை மற்றும் ஊக வணிகங்கள் மூலம் மிகுந்த லாபம் கிடைக்கும். சொத்து தொடர்பான சர்ச்சைகள் சாதகமாக முடிந்து, மதிப்புமிக்க சொத்துக்கள் கைக்கு வந்து சேரும்.

**தனுசு:** இந்த ராசியின் பாக்கிய ஸ்தானத்தில் (ஒன்பதாம் இடத்தில்) கேது சஞ்சரிப்பதால், இந்த ராசியைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த ஊரிலேயே தங்கள் தொழில் மற்றும் வேலைகளில் நிலையாக அமையும் வாய்ப்பைப் பெறுவார்கள். வேலையோடு சேர்த்து, தொழில் சார்ந்த தொடர்புகளும் விரிவடையும் வாய்ப்புள்ளது. ஒன்று அல்லது இரண்டு முறை 'தன யோகம்' (செல்வச் சேர்க்கைக்கான நல்வாய்ப்பு) அமையும் வாய்ப்புள்ளது. பங்குச் சந்தை மற்றும் ஊக வணிகங்கள் லாபகரமாக அமையும். எதிர்பாராத வகையில் சொத்து மற்றும் நிலம் சார்ந்த ஆதாயங்கள் கிடைக்கும். ஆடை மற்றும் ஆபரணங்களை வாங்குவதில் அதிக செலவுகள் ஏற்படும். பொதுவாக, புனித யாத்திரைகளைத் தவிர்த்து, வேறு எந்தக் காரணத்திற்காகவும் இவர்கள் தங்கள் சொந்த ஊரை விட்டு வெளியேறும் வாய்ப்பு இருக்காது.

**மீனம்:** இந்த ராசியின் ஆறாம் வீட்டில் கேது சஞ்சரிப்பதால், இந்த ராசியைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த ஊரிலேயே ஒரு தொழில் அல்லது வணிகத்தைத் தொடங்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். தங்கள் சொந்த ஊரிலேயே இவர்களுக்கு வீடு சார்ந்த ஆதாயங்கள் கிடைக்கும். வேலை நிமித்தமாக இடமாற்றம் ஏற்படும் வாய்ப்புகள் இல்லை. மாறாக, பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. லாட்டரி, சூதாட்டம், பங்குச் சந்தை மற்றும் ஊக வணிகங்கள் போன்றவை மூலம் இவர்களுக்குப் பெரும் லாபம் கிடைக்கும். இவர்கள் நிதி சார்ந்த பிரச்சினைகளிலிருந்து ஏறக்குறைய முழுமையாகவே விடுபடுவார்கள். இவர்களின் சொத்து மதிப்பு மற்றும் சொத்துக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வாய்ப்புகளும் உள்ளன.




## காலையில் இந்த உணவுகளை மட்டும் சாப்பிடாதீங்க..!



நமது தினசரி வாழ்க்கையில் மிக முக்கியமான உணவாக கருதப்படுவது காலை உணவுதான். இரவு முழுவதும் நீண்ட நேரம் உணவு இல்லாமல் இருந்த பிறகு, காலை உணவு தான் உடலுக்கு முதல் எரிசக்தியை வழங்குகிறது. அதனால் மருத்துவர்கள் மற்றும் சுகாதார நிபுணர்கள் "Breakfast is the most important meal of the day" என்று வலியுறுத்துகின்றனர். ஆனால் உணவை சாப்பிடுவது மட்டுமே போதாது; எந்த உணவை சாப்பிடுகிறோம் என்பதே உடல்நலத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

பலர் அறியாமல் காலை நேரத்தில் சில தவறான உணவுகளை எடுத்துக்கொள்வதால், நாள் முழுவதும் சோர்வு, செரிமான பிரச்சனை, மன அழுத்தம் போன்றவை உருவாகின்றன. அதனால் காலையில் தவிர்க்க வேண்டிய உணவுகளை விரிவாகப் பார்ப்போம்.

தேநீர் காபி: முதலில், தேநீர் மற்றும் காபி. காலையில் எழுந்தவுடன் பலருக்கும் டீ அல்லது காபி குடிப்பது ஒரு பழக்கமாகிவிட்டது. ஆனால் வெறும் வயிற்றில் இவற்றை அருந்துவது வயிற்றில் அமில உற்பத்தியை அதிகரிக்கிறது. இதனால் இரைப்பை அழற்சி, அமிலத்தன்மை, வயிறு உப்புசம் போன்ற பிரச்சனைகள் ஏற்படலாம். மேலும், காபி உடலில் கார்டிசோல் என்ற மன அழுத்த ஹார்மோனை அதிகரிக்கும். இதனால் காலை முதலே மன அழுத்தம், பதட்டம் போன்றவை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

குளிர்பானங்கள்: அடுத்ததாக குளிர்பானங்கள். சிலர் புத்துணர்ச்சியாக இருக்க வேண்டும் என்று நினைத்து காலையில் ஜூஸ் குடிக்கிறார்கள். ஆனால் இதில் உள்ள அதிக சர்க்கரை மற்றும் செயற்கை சேர்வைகள் உடல் ஆற்றலை குறைத்து, உடனடி சோர்வை ஏற்படுத்தும். உடலில் குளுக்கோஸ் ஸ்பைக் ஏற்பட்டு, பின்னர் அது திடீரென குறைவதால் பலவீனம் அதிகரிக்கும்.

பொறித்த உணவுகள்: காரமான மற்றும் பொரித்த உணவுகள் காலை நேரத்தில் மிகப்பெரிய தவறு. இவை வயிற்றின் உள்ளமைப்பை எரிச்சலடையச் செய்து, நெஞ்செரிச்சல், அஜீரணம், வயிற்று வலி போன்ற பிரச்சனைகளை தூண்டும். குறிப்பாக வெறும் வயிற்றில் இவை எடுத்தால், நாள் முழுவதும் செரிமான கோளாறு நீடிக்கும்.

தயிர்: தயிர் ஒரு ஆரோக்கியமான உணவு. ஆனால் அதை வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது. தயிரில் உள்ள புரோபயாடிக்குகள் மற்றும் கால்சியம் நமது பற்கள், எலும்புகள் மற்றும் முழு உடலையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகின்றன. ஆனாலும், அதை வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது. ஏனெனில், வெறும் வயிற்றில் தயிர் சாப்பிடுவது வயிற்றில் உள்ள நல்ல பாக்டீரியாக்களை அழித்துவிடும். அது அமிலத்தன்மை பிரச்சனைகளையும் ஏற்படுத்துகிறது.

சிட்ரஸ் பழங்கள்: எந்தச் சூழ்நிலையிலும் காலையில் எலுமிச்சை, திராட்சை மற்றும் ஆரஞ்சு போன்ற சிட்ரஸ் பழங்களைச் சாப்பிடக்கூடாது. ஏனெனில் அவற்றில் சிட்ரிக் அமிலம் அதிக அளவில் உள்ளது. அவற்றை இரவில் சாப்பிடுவது வயிற்றில் அமில உற்பத்தியை அதிகரிக்கிறது. இதனால், நீங்கள் பல பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடும்.

சர்க்கரை உணவுகள்: எந்தச் சூழ்நிலையிலும் காலையில் சாப்பிடக் கூடாத உணவுகளில் இனிப்புப் பண்டங்களும் ஒன்றாகும். சர்க்கரையால் செய்யப்பட்ட உணவுகள் சுவையாக இருந்தாலும், அவற்றை காலையில் சாப்பிட்டால் நாள் முழுவதும் சோர்வாக உணர்வீர்கள். நீங்கள் மந்தமாக இருப்பீர்கள். மேலும், இது உங்கள் இரத்த சர்க்கரை அளவையும் அதிகரிக்கும். அத்துடன், நாள் முழுவதும் உங்களுக்கு மிகுந்த பசியும் எடுக்கும்.

பச்சைக் காய்கறிகள்: பலர் ஆரோக்கியமாக இருப்பதற்காக காலையில் பச்சைக் காய்கறிகளைச் சாப்பிடுகிறார்கள். ஆனால், இவை நமது செரிமான அமைப்பில் தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அதாவது, பச்சைக் காய்கறிகளில் நார்ச்சத்து அதிகமாக உள்ளது. அவற்றை வெறும் வயிற்றில் சாப்பிடுவது மலச்சிக்கல் மற்றும் அஜீரணம் போன்ற செரிமானப் பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும்.

## வாகன ஓட்டிகளே அலர்ட்.. FASTag சரியாக ஒட்டவில்லைனா Blacklist..! NHAI வெளியிட்ட புதிய விதி..!




சென்னை, மே. 04–

நாடு முழுவதும் சுங்கச்சாவடிகளில் கட்டண வசூலை மேலும் முறைப்படுத்தும் நோக்கில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் NHAI புதிய முக்கிய அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது. வாகன உரிமையாளர்கள் தங்கள் FASTag–ஐ முன்பக்கக் கண்ணாடியில் சரியாக ஒட்டியிருக்க வேண்டும் என்றும், அதை மீறினால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்படலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## ஹார்முஸ் ஜலசந்தியை கடக்கும் கப்பல்களுக்கு அமெரிக்கா பாதுகாப்பு வழங்கும்: டிரம்ப்!



அமெரிக்கா, மே. 04–

நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஈரானுடன் "மிகவும் நேர்மறையான பேச்சுவார்த்தைகள்" நடைபெற்று வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்தார். இருப்பினும், தடைபட்டுள்ள ஹார்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பணியை அமெரிக்கா விரைவில் தொடங்கும் என்றும் அவர் மேலும் கூறினார். முன்னதாக, ஈரான் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பகெய், "போரை முடிவுக்கு கொண்டு வருவதை மையமாக கொண்ட" 14 அம்சத் திட்டத்தை தெஹ்ரான் சமர்ப்பித்துள்ளதாகவும், அதற்கு வாஷிங்டன் பாகிஸ் தானிய மத்தியஸ்தர்களுக்கு அனுப்பிய செய்தியில் பதிலளித்துள்ளதாகவும் அரசு தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார். "எனது பிரதிநிதிகள் ஈரான் நாட்டுடன் மிகவும் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதையும், இந்த பேச்சுவார்த்தைகள் அனைவருக்கும் மிகவும் சாதகமான முடிவு காண வழிவகுக்கும் என்பதையும் நான் முழுமையாக அறிவேன்," என்று டிரம்ப் தனது 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் கூறினார்.

கடந்த பிப்ரவரி 28–ஆம் தேதியன்று அமெரிக்கா–இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது தாக்குதல்களை தொடுத்து, இஸ்லாமிய குடியரசின் உச்ச தலைவரை கொன்றது. இதற்கு பதிலடியாக, தெஹ்ரான் அப்பகுதியில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் மற்றும் இஸ்ரேலிய இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்தியது. ஏப்ரல் 8–ஆம் தேதியன்று போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது; அன்று முதல் இஸ்லாமாபாத்தில் ஒரு சுற்று நேரடி அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளன, ஆனால் இரு நாடுகளும் எந்த உடன்பாடும் எட்டாக்கனியாகவே உள்ளன.

## தி.மு.க., தேர்தல் வரலாறு: ஏற்றத்தாழ்வுகளும் இமாலய வெற்றிகளும்!



சென்னை, மே. 04–

தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத பேரியக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க) கடந்த 60 ஆண்டு கால தேர்தல் பயணத்தில், பல ஏற்ற இறக்கங்களை சந்தித்துள்ளது. அண்ணா, கருணாநிதி மற்றும் தற்போதைய முதல்வர் ஸ்டாலின் ஆகிய மூன்று தலைமுறைகளைக் கடந்த இந்த நீண்ட பயணத்தில் அக்கட்சி பல வெற்றிகளையும், சவால்களையும் சந்தித்துள்ளது.

தி.மு.க தனது தேர்தல் வரலாற்றில் பலமுறை தனிப்பெரும்பான்மையுடன், ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

**ஆரம்பக்கால எழுச்சி:**

1962–ல் வெறும் 50 இடங்களுடன் தொடங்கிய தி.மு.க, 1967–ல் 137 இடங்களை வென்று அண்ணாவின் தலை மையில் முதன்முறையாக ஆட்சியைப் பிடித்தது. 1971–ல் கருணாநிதியின் தலைமையில் 184 இடங்களைக் குவித்து தனது வரலாற்றுச் சாதனை வெற்றியைப் பதிவு செய்தது.

**தனிப்பெரும்பான்மை:**

தி.மு.க., தனது தேர்தல் வரலாற்றில், 5 முறை தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியை பிடித்துள்ளது. 1967 (137 இடங்கள்), 1971 (184 இடங்கள்), 1989 (150 இடங்கள்), 1996 (173 இடங்கள்), 2021 (133 இடங்கள்).

**சரிவுகளும் மீண்டெழுதலும்:**

1991–ல் முன்னாள் பிரதமர் ராஜீவ் படுகொலைக்குப் பின் நடந்த தேர்தலில் வெறும் 2 இடங்களில் மட்டுமே வென்று பெரும் சரிவைச் சந்தித்தது. இருப்பினும், அடுத்த ஐந்தாண்டுகளிலேயே (1996) மீண்டெழுந்து, 173 இடங்களை வென்று மீண்டும் அரியணை ஏறியது.

**சமீபத்திய நிலவரம்:**

2011–ல் 23 இடங்களாகக் குறைந்த பலம், 2016–ல் 89 ஆக உயர்ந்து, இறுதியில் 2021 சட்டமன்றத் தேர்தலில் 133 இடங்களுடன், ஸ்டாலின் தலைமையில் மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளது.

**ஓட்டு சதவீதத்தில் மாற்றங்கள்:**

வென்ற இடங்களைப் போலவே, அக்கட்சி பெற்ற ஓட்டு சதவீதமும் பெரும் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டுள்ளது.

**அதிகபட்ச ஓட்டுகள்:**

1996–ம் ஆண்டு நடந்த தேர்தலில் தி.மு.க கூட்டணி மிக உயர்ந்த அளவாக 53.8% ஓட்டு களைப் பெற்று சாதனை படைத்தது. இதற்கு அடுத்தபடியாக 1971–ல் 48.6% ஓட்டுகளைப் பெற்றிருந்தது.

**குறைந்தபட்ச ஓட்டுகள்:**

1980 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் முறையே 22.1% மற்றும் 22.4% ஓட்டுகளைப் பெற்று அக்கட்சி பின்னடைவைச் சந்தித்தது.

**தற்போதைய நிலை:**

கடந்த 2021 தேர்தலில் 37.7% ஓட்டுகளைப் பெற்று தி.மு.க வலுவான நிலையில் உள்ளது.

**தலைமுறைகள் கடந்த அரசியல் பயணம்:**

அண்ணாவின் காலத்தில் தொடங்கி, கருணாநிதியின் வியூகங்கள் வழி பயணித்து, தற்போது ஸ்டாலின் தலைமையில், தி.மு.க., தனது அரசியல் செல்வாக்கை நிலைநிறுத்தி வருகிறது. 2026 சட்டசபை தேர்தல் முடிவுகள் இன்று வெளியாகும் நிலையில், கருத்துக்கணிப்புகள் பலவும், ஸ்டாலின் மீண்டும் ஆட்சியை பிடிப்பார் என்று கூறியுள்ளது. 1971க்குப் பிறகு, தொடர்ந்து இருமுறை தி.மு.க., ஆட்சியை பிடித்ததில்லை என்ற வரலாறு இன்று மாறுமா?

## வலையை விரிங்க... ஆளை பிடிங்க! த.வெ.க. உத்தரவால் பிற கட்சியினர் அதிர்ச்சி!




கோவை, மே. 04–

சட்டசபை தேர்தல் முடிவுகள் இன்று வெளியாகும் நிலையில், மாற்றுக்கட்சிகளை சேர்ந்தவர்களுக்கு வலைவிரிக்குமாறு, கட்சியினருக்கு த.வெ.க. அறிவுறுத்தியுள்ள தகவல் வெளியாகியுள்ளது.

தேர்தல் முடிவுகளில் த.வெ.க. பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தலில் கிடைக்கும் செல்வாக்கை தக்க வைத்துக் கொள்ளும் பணியில், த.வெ.க. இப்போதே இறங்கிவிட்டது. இதற்காக வேட்பாளர்களை சென்னை பனையூர் அழைத்து, விஜய் பல ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இது குறித்து அக்கட்சியினர் சிலர் கூறியதாவது: த.வெ.க. வேட்பாளர்கள் பலர் தி.மு.க., அ.தி.மு.க.விடம் விலை போனதை விஜய் விரும்பவில்லை. தேர்தலில் த.வெ.க. தாக்கத்தை ஏற்படுத்தினாலும் தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.,வை எதிர்த்து அரசியல் செய்வது எளிதல்ல. தேர்தலில் கிடைக்கும் எழுச்சியை தக்க வைக்கும் விதமாக, மாற்றுக்கட்சிகளில் அதிருப்தியாக உள்ள நிர்வாகிகளிடம் பேசி, அவர்களை த.வெ.க.வில் இணைக்குமாறு விஜய் கட்டளையிட்டுள்ளார். கோவையில் உள்ள 5 மாவட்ட செய லர்களுக்கு இதற்கான அஸைன்மென்ட் வழங்கப்பட்டுள்ளது. தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ., காங்., உள்ளிட்ட கட்சிகளில் சீட் கிடைக்காதவர்கள், சீனியர்களால் ஓரங்கட்டப்பட்டவர்கள், அதிருப்தியாளர்களை த.வெ.க.வுக்கு வரவழைக்க வேண்டும். அவர்களுக்கு முக்கிய பொறுப்புகளும் தரவேண்டும் என விஜய் கூறியுள்ளார். முதல்கட்டமாக கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட தி.மு.க. நிர்வாகிகள் சிலர் எங்கள் கட்சியில் இணை யவுள்ளனர். தேர்தல் முடிந்ததும் இன்னும் சில முக்கிய புள்ளிகளும் இணைவார்கள். இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர். ஏற்னவே திக்...திக்...மனநிலையில் உள்ள திராவிட கட்சியினர், த.வெ.க.வின் இந்த வலை விரிப்பு திட்டத்தை அறிந்து, தங்களுக்குள் ஆழமாக விவாதிக்கத்துவங்கியுள்ளனர். எந்த கட்சியை சேர்ந்தவர்கள், எத்தனை பேர், எந்த பக்கம் சாய்வார்கள் என்பது தெரிந்து விடும்.



## சினிமா துளிகள்..!

### நடிகை திரிஷா திருப்பதியில் சாமி தரிசனம்!



நடிகை திரிஷா இன்று அதிகாலை திருப்தி ஏழுமலையான் கோவிலில் சாமி தரிசனம் செய்தார்.

1983இல் பிறந்த திரிஷா இன்று (மே 4) தனது 42வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இதனை முன்னிட்டு அவர் திருப்பதி சென்று சாமி தரிசனம் செய்துள்ளார்.

இன்று காலை கோவிலில் சுப்ரபாத சேவையின்போது அவர் சாமி தரிசனம் செய்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

சூர்யாவுடன் அவர் இணைந்து நடித்த கருப்பு படம் வரும் மே 14 அன்று வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் ஒரு அமைதி முன்மொழிவை அமெரிக்காவுக்கு அனுப்பியது ஈரான்!



வாஷிங்டன், மே. 04–

புதிய அமைதி முன்மொழிவு குறித்து அதிபர் டிரம்ப் கூறியுள்ளதாவது: ஈரானிடம் இருந்து வந்துள்ள புதிய முன்மொழிவுகளை பரிசீலித்து வருகிறேன்.

ஆனால், ஈரான் தவறாக நடந்து கொண்டால் மீண்டும் ராணுவ தாக்குதல் நடத்தப்படும். அமைதி ஒப்பந்தம் எட்டப்படும் என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது. ஏனெனில், கடந்த 47 ஆண்டுகளாக மனித குலத்திற்கும், உலகிற்கும் ஈரான் செய்த செயல்களுக்கு, அவர்கள் இன்னும் உரிய விலையை கொடுக்கவில்லை என்பதால், புதிய முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்வது குறித்து என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

குறிப்பாக, ஈரானின் முன்மொழிவில் அணுசக்தி திட்டம் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என கூறப்படுகிறது.

புதிய முன்மொழிவின்படி அமைதி ஒப்பந்தம் கையெழுத்தான பிறகே, அணுசக்தி திட்டம் குறித்து பேச்சு நடத்த ஈரான் முடிவு செய்துள்ளது. ஆனால், அணுசக்தி திட்டம் குறித்த உறுதியான ஒப்பந்தம் இல்லாமல் போரை முடிக்க அமெரிக்கா தயாராக இல்லை.

## வேலை வாய்ப்பு

### இந்திய இராணுவத்தில் 190 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: இந்திய ராணுவம்
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 190 சி.எஸ்.பி.ஓ (சிவிலியன் ஸ்விட்ச் போர்டு ஆபரேட்டர்) முதல் கிரேடு–II, குரூப் 'சி' பணியிடங்கள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 02.05.2026, நள்ளிரவு 12.01 மணி
கடைசி தேதி: 31.05.2026, இரவு 11.59 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://indianarmy.nic.in/

## கத்திரி வெயில் தொடக்கம்: வெப்பம் 3 டிகிரி அதிகரிக்க வாய்ப்பு!



சென்னை, மே. 04–

கோடை வெயிலின் உச்சமாக கருதப்படும் கத்திரி வெயில் காலம் இன்று தொடங்குகிறது. இந்த கால கட்டத்தில் வெப்பத்தின் தாக்கம், வழக்கத்தை விட 3 டிகிரிக்கு மேல் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில், மார்ச் மாதம் முதல் கோடை வெயிலின் தாக்கம் காணப்படுகிறது. இருப்பினும், மே 4 முதல் 28ம் தேதி வரையிலான 24 நாட்கள் கத்திரி வெயில் காலமாக வரையறுக்கப்படு கிறது. இந்த கால கட்டத்தில், கோடை வெயிலின் தாக்கம் வழக்கத்தை விட அதிகமாக இருக்கும். குறிப்பாக, உச்சபட்ச வெப்பம் பதிவாகும்.

நேற்று காலை வரையிலான 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் 10 செ.மீ., மழை பெய்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக, சிவகங்கை மாவட்டம் திருப்புவனம், 8; மதுரை மாவட்டம் சோழவந்தான், சாத்தியார் தலா, 7; ஆண்டிப்பட்டி, தானியமங்கலம் பகுதிகளில் தலா, 6 செ.மீ., மழை பதிவாகியுள்ளது.

சத்தீஸ்கர் தெற்கு முதல் தெலுங்கானா, ஆந்திரா வழியாக தமிழகத்தின் குமரிக்கடல் வரை, நிலத்தில் இருந்து 1.5 கி.மீ., உயரத்தில் வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பகுதி நிலவுகிறது.

இதன் காரணமாக, தமிழகத்தில் சில இடங்கள், புதுச்சேரியில், இன்றும் நாளையும் இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்யலாம்.

நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, கரூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில், இன்று பலத்த காற்றுடன் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் சில இடங்களில், இன்று முதல் வரும் 7 வரை, அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 3 டிகிரி செல்ஷியஸ் கூடுதலாக பதிவாகலாம். கடலோர மாவட்டங்களில் சில இடங்கள் மற்றும் புதுச்சேரியில் அதிக வெப்பத்தால், வெளியில் செல்வோருக்கு அசவுகரியம் ஏற்படலாம்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இஸ்ரேல் வான்வழி தாக்குதல்; லெபனானில் கடந்த 24 மணிநேரத்தில் 41 பேர் பலி!



பெய்ரூட், மே. 04–

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் இணைந்து ஈரானை தாக்கி வருகிறது. இந்த போரில், ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா அமைப்பு லெபனானில் இருந்து செயல்பட்டு வருகிறது. இஸ்ரேல் மீது தாக்குதலை தொடுத்து வருகிறது. பதிலடியாக லெபனானை இஸ்ரேல் தாக்கியது. இதில், லெபனான் நாட்டில் பொதுமக்கள் பலர் பலியானார்கள். இதனால், உடனடியாக போர்நிறுத்த உடன்பாடு ஏற்படுத்த முடிவு செய்து, இஸ்ரேலிடம் லெபனான் கோரி வந்தது.

அதில் பலன் ஏற்பட்டது. லெபனான் ஜனாதிபதி ஜோசப் ஆவன் மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகிய இருவரும், பேச்சுவார்த்தை நடத்தி, பெரிய அளவில் தீர்வு ஏற்படுவதற்கான நடவடிக்கையாக, தற்காலிக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தினர்.

இதனை அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப்பும் உறுதிப்படுத்தினார். இதன்படி, லெபனான் மற்றும் இஸ்ரேல் இடையே 10 நாட்களுக்கு தற்காலிக போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு உள்ளது. ஏப்ரல் 17–ந்தேதி வரை போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட நிலையில், அது பின்னர் மே மாதம் தொடக்க வாரம் வரையில் நீட்டிக்கப்பட்டு உள்ளது.

எனினும், தெற்கு லெபனானில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இதன்படி, இஸ்ரேல் நேற்று நடத்திய வான்வழி தாக்குதலில் லெபனான் நாட்டில் 10 பேர் பலியானார்கள். கடந்த 24 மணிநேரத்தில் 41 பேர் பலியாகி உள்ளனர். இதனால், கடந்த மார்ச் 2–ந்தேதியில் இருந்து இதுவரை 2,659 பேர் உயிரிழந்தும், 8,183 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

ஹிஸ்புல்லா குழுக்களின் தளங்களை இலக்காக கொண்டு தாக்குதல் நடந்து வருகிறது என இஸ்ரேல் கூறி வருகிறது. ஆனால், பலியானவர்களில் பலர் பொதுமக்கள் ஆவர் என தகவல் தெரிவிக்கின்றது. லெபனானை இஸ்ரேல் தாக்க தொடங்கியதில் இருந்து இதுவரை 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு தேடி, லெபனானில் இருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்று விட்டனர்.

# போர் பதற்றத்திற்கு இடையே ஹார்முஸ் ஜலசந்தியை இந்திய கப்பல் கடந்தது!



அமெரிக்கா, மே. 04–

மத்திய கிழக்கு போரில் ஹோர்முஸ் ஜலசந்தியை ஈரான் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இதனால் அங்கு கப்பல் போக்குவரத்து முடங்கியது. இருந்த போதிலும் இந்தியாவை நோக்கி புறப்பட்ட கப்பல்களுக்கு ஈரான் அனுமதி அளித்தது. இதனால் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றிய சில கப்பல்கள் இந்தியாவை வந்தடைந்தன.

இதற்கிடையே ஈரான் துறைமுகங்களை முடக்கும் வகையில் ஹோர்முஸ் ஜலசந்தியில் கடந்த ஏப்ரல் 13–ந்தேதி முதல் அமெரிக்க கடற்படை முற்றுகை நடவடிக்கையை மேற்கொண்டு உள்ளது. இதற்கு பதிலடியாக ஈரான் அந்த ஜலசந்தியில் தனது கட்டுப்பாட்டை அதிகரித்து உள்ளது.

இதில் 2 இந்திய கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது.

இந்த நிலையில் ஹோர்முஸ் ஜலசந்தியில் நிலவும் பதற்றங்களுக்கு மத்தியில் இந்தியாவை நோக்கி புறப்பட்ட கப்பல் ஒன்று பாதுகாப்பாக ஹோர்முஸ் ஜலசந்தியை கடந்து உள்ளது.

மார்ஷல் தீவுகளின் கொடியை ஏந்திய எம்.டி. சர்வ சக்தி என்ற கப்பல் 46,313 மெட்ரிக் டன் எல்.பி.ஜியுடன் (திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயு) ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள துறைமுகத்தில் இருந்து புறப்பட்டது. அந்த கப்பல் வெற்றிகரமாக ஹோர்முஸ் ஜலசந்தியை கடந்து உள்ளது.

அது வருகிற 13–ந்தேதி விசாகப்பட்டினத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் கடற்படை முற்றுகை மற்றும் ஈரானின் கடும் கட்டுப்பாடுகளுக்கு பிறகு ஹோர்முஸ் ஜலசந்தியை கடந்த முதல் இந்திய கப்பல் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மார்ச் மாதத்தில் இருந்து இதுவரை, இந்திய கொடியை ஏந்திய 10 எரிசக்தி கப்பல்கள், 9 எல்.பி.ஜி. கப்பல்கள் மற்றும் ஒரு கச்சா எண்ணெய் கப்பல் ஹோர்முஸ் ஜலசந்தியைக் கடந்துள்ளன.

# மூன்றாம் இடத்தில் திமுக.. அண்ணா அறிவாலயத்தில் கொண்டாட்ட ஏற்பாடுகள் அகற்றம்?



சென்னை, மே. 04–

234 சட்டமன்றத் தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 23 அன்று தமிழகத்தில் நடைபெற்ற தேர்தல் வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன. காலை 10.50 மணி நிலவரப்படி தவெக 106 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

அதிமுக கூட்டணி 75 இடங்களில் முன்னிலை வகிக்கிறது. ஆளும் திமுக கூட்டணி 51 இடங்களில் முன்னிலையுடன் 3ஆம் இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் திமுக தலைமை அலுவலகமான சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று காலை கொண்டாட்டங்களுக்காக கொண்டுவரப்பட்ட பொருட்கள் மற்றும் அமைக்கப்பட்ட பந்தல் அகற்றப்பட்டு வேனில் ஏற்றி திரும்பக் கொண்டு செல்லப்படும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

இருப்பினும் செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்த அங்கிருந்த திமுக தொண்டர் ஒருவர், அது நேற்று இரவு நடந்த நிகழ்வொன்றுக்காக அமைக்கப்பட்ட ஏற்பாடுகள் என்றும் அவற்றுக்கும் தேர்தல் முடிவுகளுக்கும் சம்பந்தம் இல்லை என தெரிவித்துள்ளார். காலை 11 மணிக்கு பிறகு திமுக முன்னிலைக்கு வரும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# சஸ்பெண்ட் ஆனவர்களுக்கு மீண்டும் வேலை: பதிவுத்துறை நடவடிக்கை!




சென்னை, மே. 04–

பதிவுத்துறையில் பல்வேறு வழக்குகள் காரணமாக, தற்காலிக பணி நீக்கத்தில் இருந்தவர்களை, மீண்டும் பணியில் சேர்க்கும் நடவடிக்கை தொடங்கி உள்ளது.

தமிழகத்தில் சார் – பதிவாளர் அலுவலகங்களில், பொதுமக்களை அலைக்கழிப்பதுடன், ஒவ்வொரு பணிக்கும் லஞ்சம் வசூலிப்பதாக புகார் கூறப்படுகிறது.

கடந்த, 2021 முதல், 2026 வரையிலான காலகட்டத்தில், லஞ்ச ஒழிப்புத்துறை சோதனையில் சிக்கியது, அங்கீகாரமில்லாத மனைகள் பதிவு, அரசு வருவாய் இழப்பு ஏற்படுத்தியது போன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதில் சிக்கிய, சார் –பதிவாளர்கள், உதவியாளர்களில் பெரும்பாலானோர், தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

துறை ரீதியான விசாரணை முடிந்த நிலையில், அதில் குற்றம் உறுதியாகாத நிலையில், 'சஸ்பெணட்' உத்தரவு மட்டும் தொடர்ந்தது. அதை நீக்கி, தங்களை மீண்டும் பணியில் சேர்க்க வேண்டும் என, சார் – பதிவாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில், ஆட்சி முடியும் நிலையில், கடந்த மார்ச் மாதம் இத்துறையின் அமைச்சராக இருந்த மூர்த்தி, 'சஸ்பெண்ட்' ஆனவர்களை, மீண்டும் பணியில் சேர்க்க அனுமதி அளித்தார். ஆனால், தேர்தல் நடத்தை விதிகளை காரணம் காட்டி, பதிவுத்துறை ஐ.ஜி., அதற்கான உத்தரவுகளை பிறப்பிக்காமல் இருந்தார்.

தற்போது, நான்கு சார் – பதிவாளர்கள் மற்றும் நான்கு உதவியாளர்களின், 'சஸ்பெண்ட்' உத்தரவை ரத்து செய்து, பதிவுத்துறை ஐ.ஜி., தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் உத்தரவிட்டு உள்ளார். அவர்களுக்கான புதிய பணியிடங்களும் ஒதுக்கப்பட்டு உள்ளன. இதையடுத்து தகுதி உள்ள மற்றவர்களும், மீண்டும் பணியில் சேர்க்கப்பட உள்ளதாக, பதிவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அணுசக்தி குறித்த பேச்சுவார்த்தை... ஈரான் சொன்ன மிகமுக்கிய தகவல்!



ஈரான், மே. 04–

யுரேனியம் செறிவூட்டலை நிறுத்துவதாக வெளியான தகவல்களை திட்டவட்டமாக மறுத்த ஈரான் வெளியுறவு செய்தி தொடர்பாளர் இஸ்மாயில் பகெய், ஈரானின் திட்டம் போரை முடிவுக்கு கொண்டுவருவதில் மட்டுமே முழுமையாக கவனம் செலுத்தி வருகிறது என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈரானின் திட்டத்தின் ஒரு பகுதியாக, 15 ஆண்டுகளாக நடைபெற்று வரும் யுரேனியம் செறிவூட்டல் இடைநிறுத்தம் செய்யப்பட்டது குறித்த ஊடகங்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார் என தஸ்னிம் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பாகெய் கூறும் போது, “பாருங்கள், என்னால் சொல்ல முடிவது என்னவென்றால், எங்கள் திட்டம் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் மட்டுமே முழுமையாக கவனம் செலுத்துகிறது. இந்த திட்டத்தில் அணுசக்தி தொடர்பான விவரங்கள் எவ்விதத்திலும் இல்லை,” என்றார். கண்ணிவெடிகளை அகற்றுவதில் ஈரானின் அர்ப்பணிப்பு மற்றும் அமெரிக்காவின் பங்கேற்பு குறித்த கேள்விகளை மறுத்த அவர், இதுவும் சில ஊடகங்களின் கற்பனையே என்று கூறினார்.

அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் கூறியதாவது, “தற்போது நாங்கள் லெபனான் உட்பட, பிராந்தியத்தில் போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பான விவரங்களில் கவனம் செலுத்துகிறோம். மற்ற பிரச்சினைகள், நாங்கள் ஒரு காலத்தில் அணுசக்தி துறையில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் வரலாற்றோடு ஓரளவு தொடர்புடையவை என்று கூறப்படுகிறது.

அணுசக்தி துறை என்ற பெயரிலும் அறியப்பட்ட, முந்தைய இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகளில் நடந்த அணுசக்தி பேச்சுவார்த்தைகள் தான், சியோனிச ஆட்சிக்கும் அமெரிக்காவிற்கும் இடையே போருக்கு வழிவகுத்தன. ஈரானின் 14 அம்ச திட்டம் போரை முடிவுக்கு கொண்டுவருவதில் கவனம் செலுத்துகிறது, மேலும் வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்ட பிரச்சினைகள் எங்கள் திட்டத்தில் இல்லை,” என்றார். ஈரான் அமெரிக்காவிடம் சமர்ப்பித்த 14 அம்ச முன்மொழிவில், ஆக்கிரமிப்பு செய்யாமைக்கான உத்தரவாதங்கள், ஈரானை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து அமெரிக்க இராணுவ படைகளை திரும்பப் பெறுதல், கடற்படை முற்றுகையை நீக்குதல், ஈரானின் முடக்கப்பட்ட சொத்துக்களை விடுவித்தல், இழப்பீடு வழங்குதல், தடைகளை நீக்குதல் மற்றும் லெபனான் உட்பட அனைத்து முனைகளிலும் போரை முடிவுக்கு கொண்டுவருதல் ஆகியவை அடங்கும்.

ஈரானின் முன்மொழிவுக்கு அமெரிக்க தரப்பு பதிலளித்துள்ளதாகவும், அமெரிக்காவின் பதிலை ஆய்வு செய்த பின்னரே ஈரானின் பதில் சமர்ப்பிக்கப்படும் என்று பகெய் மேலும் கூறினார்.

# நடிகர் சங்கம் - தயாரிப்பாளர் சங்கம் இடையே மோதல்: திரைப்படங்கள் தயாரிப்பில் சிக்கல் ஏற்படும் அபாயம்!



சென்னை, மே. 04–

நடிகர்களின் சம்பள விவகாரம் தொடர்பாக, திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்திற்கும், தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ள நிலையில், திரைப்படங்கள் தயாரிப்பு பணி பாதிக்கப்பட்டுள்ளது. நடிகர்களை வழிக்கு கொண்டு வர, தொடர் வேலை நிறுத்தம் செய்யலாமா என, தயாரிப்பாளர்கள் ஆலோசித்து வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. ஒரு பொருள் உற்பத்தி செய்யப்பட்டதுமே, தயாரிப்பு செலவு, லாபம் போன்றவற்றை கணக்கிட்டு, விலை நிர்ணயம் செய்யப்படும். ஆனால், சினிமாவை பொறுத்தவரை, படம் முழுதும் உருவாகி தியேட்டருக்கு வந்த பின்பே, அதன் வசூல் எவ்வளவு என, தெரியவரும். படம் நன்றாக ஓடினால் தான் லாபம்; இல்லை எனில் நஷ்டமே.

### தலை தப்பும்

ஆனால், நடிகர்கள், தொழில்நுட்ப கலைஞர்கள், படப்பிடிப்பு தொடங்கும் முன்னரே, தங்களின் சம்பளத்தை பெற்று விடுவர். ஒட்டுமொத்த தயாரிப்பு செலவை தாண்டி, படம் வசூலித்தால் மட்டுமே, தயாரிப்பாளர் தலை தப்பும்.

நடிகர்களின் அதிகப்படியான சம்பளம், தயாரிப்பு செலவு போன்ற காரணங்களால், தமிழ் திரையுலகம் தொடர்ந்து சரிவை சந்தித்து வருகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில், மற்ற மொழி படங்களை விட, தமிழில் வெற்றி படங்களை கேட்டால், விரல் விட்டு எண்ணி விடலாம். முதன் முதலில், ஹிந்தியில் வெளியான, டங்கல் படம் 1,000 கோடி ரூபாய் வசூலித்தது. அதன்பின்னரே, ஜவான், தெலுங்கில் பாகுபலி, ஆர்.ஆர்.ஆர்., கல்கி, கன்னடத்தில் கே.ஜி.எப், காந்தாரா போன்ற படங்கள், 1,000 கோடி ரூபாய் வசூலை தொட்டுள்ளன. தமிழ் திரையுலகில் தயாரிக்கப்பட்ட படங்களில், அந்த மாதிரி ஒன்று கூட இல்லை.

மாறாக நடிகர், நடிகையர், தொழில்நுட்ப கலைஞர்களின் சம்பளம் மட்டும், கோடிகளில் ஏறுமுகத்தில் உள்ளது. அதேபோல தயாரிப்பு செலவும் அதிகரித்துள்ளது.

### ரூ.500 கோடி

சிறு படமாக இருந்தாலும், குறைந்தபட்சம் இரண்டு கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஸ்டார் வேல்யூ நடிகர் என்றால், குறைந்தபட்சம், 200 முதல் 500 கோடி ரூபாய் வரை செலவிட வேண்டியுள்ளது. இப் படங்களின் வசூல் என்று பார்த்தால், போட்ட முதலீடே கிடைக்காத நிலை உள்ளது.

இந்நிலையில், தயாரிப்பாளர்கள் சங்கத்தினர், 'நடிகர்கள் தங்களின் சம்பளத்தை ஆரம்பத்திலேயே பெறாமல், படங்களின் லாபத்தின் அடிப்படையில் பெற வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்தனர். இதை தென்னிந்திய நடிகர் சங்கம் ஏற்கவில்லை.

இதுகுறித்து இருதரப்பினரும் மாறி, மாறி அறிக்கை விட்ட நிலையில், நேற்று முன்தினம் தயாரிப்பாளர் சங்கம் சார்பில், தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி, ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இதை நடிகர் சங்கம் ஏற்காத நிலையில், வேலை நிறுத்தத்தால், 33 படங்களின் படப்பிடிப்பு பாதிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து, நடிகர் சங்கம் தரப்பில், 'நடிகர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதும் மொத்த சம்பளத்தில், 10 சதவீதம் தரவேண்டும்.

'படப்பிடிப்பில், 25 சதவீதம் முடிந்ததும், 15 சதவீத சம்பளம்; பாதி படப்பிடிப்பு முடிந்ததும், 15 சதவீத சம்பளம், 75 சதவீதம் படப்பிடிப்பு முடிந்ததும், 10 சதவீதம்; முழு படப்பிடிப்பு முடிந்ததும், 10 சதவீதம்; பின்னணி குரல் முடியும் முன், மீதி, 40 சதவீதம் சம்பளம் வழங்க வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டது.

### அபாயம்

மேலும், நாள் கணக்கில் சம்பளம் வாங்கும் நடிகர்களுக்கு, 70 சதவீதம் படப்பிடிப்பு நடந்த தினமே, சம்பளம் வழங்க வேண்டும். மீதி, 30 சதவீதத்தை டப்பிங்கிற்கு முன் வழங்க வேண்டும் என்று கூறப்பட்டது.

இதை தயாரிப்பாளர்கள் சங்கம் ஏற்கவில்லை. அத்துடன், நடிகர்களை வழிக்கு கொண்டு வர, தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது குறித்து, ஆலோசித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. இப்பிரச்னையால் திரையுலகம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தெலுங்கு திரையுலகில், சம்பள உயர்வு கோரிக்கையை, தெலுங்கானா முதல்வர் தலையிட்டு தீர்த்து வைத்தது போல, தமிழ் திரைத்துறை விவகாரத்தில், புதிய அரசு அமைந்ததும், தமிழக அரசு கூட்டுக்குழு அமைத்து பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என, திரையுலகினர் வலியுறுத்தியுள்ளனர்.

அடம் பிடிக்கும் நடிகர்களுக்கு தடை? திரைப்பட தயாரிப்பாளர் தனஞ்ஜெயன் பேட்டி: தேர்தல் முடிவுகள் வெளியான பின், நடிகர் சங்கத்தினர் பேச்சுக்கு வருவதாகக் கூறியுள்ளனர். வரும், 6ம் தேதி பேச்சு நடத்தி முடிவு எட்டப்படும். தயாரிப்பாளர்களாகிய நாங்கள், லாபத்தின் அடிப்படையிலேயே சம்பளம் என்பதில் உறுதியாக உள்ளோம். தெலுங்கு திரையுலகில் ஏற்கனவே லாப பகிர்வு அடிப்படையில் தான், நடிகர்களுக்கு சம்பளம் தரப்படுகிறது. அதை ஏற்றுக்கொள்ளாத நடிகர்களின் படங்களை தயாரிப்பதில்லை என, அங்குள்ளவர்கள் முடிவு எடுத்துள்ளனர். ஒரு படத்தை தயாரித்து வெளியான பின், அதில் வரும் லாபத்தை பகிர்வது தான், திரையுலகில் அனைவருக்கும் பயன் தரும். இவ்வாறு அவர் கூறினார்.

# விசில் சத்தத்தில் செவிடு ஆனது திமுக!



சென்னை, மே. 04–

புதிதாக கட்சி தொடங்கிய நடிகர் விஜய், தங்களுக்கும் திமுகவுக்கும் தான் போட்டி என்று பிரசாரம் செய்தார். ஆனால், முதல்வர் ஸ்டாலினோ, தங்களுக்கும் டில்லிக்கும் தான் போட்டி என்று பிரசாரம் செய்தார்.

விஜய் கூறிய புகார்கள், குற்றச்சாட்டுகள் எதற்குமே பதில் சொல்லாமல் கடந்து சென்றார் ஸ்டாலின். பதில் சொன்னால், விஜய் பெரிய ஆள் ஆகி விடுவார் என்ற எண்ணமும் அதற்கு காரணம். விஜய்க்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கு, அவருக்கு திரண்டு வரும் கூட்டம், ஆகியவற்றை கண்டு மிரண்டு போன திமுகவினர், இந்த முறை மொத்தமாக பணத்தை இறக்கி வெற்றி பெற்று விடலாம் என்று மனப்பால் குடித்தனர்.

அதனால் தமிழகத்தில் எந்த தேர்தலிலும் இல்லாத வகையில் இந்த தேர்தலில் பணம் புகுந்து விளையாடியது. ஓட்டுக்கு ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய், விஐபி தொகுதிகளில் 5 ஆயிரம் ரூபாய் என அள்ளி விட்டனர் திமுகவினர்.

அப்படி இருந்தும், ஓட்டுக்காக ஒரு பைசா செலவழிக்காத விஜய் கட்சி வேட்பாளர்கள் 100க்கும் மேற்பட்டோர் வெற்றி முகத்தில் இருக்கின்றனர்.

கோடிக்கணக்கில் செலவழித்த திமுகவினர், தோல்வி முகத்தில் இருக்கின்றனர். விஜய் கட்சியினரின் விசில் சத்தம், திமுகவினரை செவிடு ஆக்கி விட்டது என்பதே இந்த தேர்தல் முடிவுகள் சொல்லும் செய்தியாக இருக்கிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020